புரம் தொகுதிக் கிராமங்களை மாற்றித் தொகுப்பதற்கான செயற் குறிப்பை, வட ஆர்க்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி பணிந்தனுப்பியுள்ளார். மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் செயற்குறிப்பை வருவாய்த் துறை (நிலவரி) வாரியம் பரிவுரை செய்தது. வருவாய்த் துறையின் 8—8—1973 நாளிட்ட 4722-ஆம் எண் அரசாணையில் அச் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கிராமங்களை மாற்றித் தொகுத்ததன் விவரங்கள் வருமாறு :—

செங்கம் வட்டம் தற்போதுள்ள தொகுதி.	வருவாய்த்துறையின் 8—8—1973 நாளிட்ட 4722-ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகுதி.
வாணுபுரம் (தொகுதி)	1. வாணுபுரம் (தனித்தொகுதி).
குங்குலியநத்தம்	2. குங்குலியநத்தம் (தொகுதி).
எடக்கல்	மழுவம்பட்டு.
	பேராயம்பட்டு.
பெருந்துறைப்பட்டு	
பேராயம்பட்டு.	3. எடக்கல் (தொகுதி).
மழுவம்பட்டு	பெருந்துறைப்பட்டு.

Agricultural Consultancy Service

* 19 *Q*.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to set up an Agricultural Consultancy Service for the benefit of farmers in this State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், ஏற்கெனவே கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் ஒவ்வொரு துறையிலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்து இந்த கவுன்சில் ஏற்பட்டிருக்கிறதா? அனுபவம் உள்ளவர்கள் இதில் கொண்டு வரப்பட்டிருக்கிறார்களா?

@ 188-189 -ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 சனவரி 19]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மதுரை, கோவை ஆகிய இடங்களில் இருக்கும் ஆலோசனைக் குழு வேறு. 'ப்ரொடக்டிவிடி கவுன்சில்', விவசாயத்துறை வளர்ச்சிக் குழு, சென்னையில் இருப்பது வேறு. சென்னையில் உள்ள இந்தக் குழுவிற்கு என்னென்ன பணிகள் என்று விவர அறிக்கை அச்சிடப்பட்டு உறுப்பினர்களின் முன்னால் வைக்கப் பட்டுள்ளது.

பருத்திப் பயிர் முனைப்புத் திட்டம்

*20 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பருத்திப் பயிர் முனைப்புத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கரில்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) இரண்டு இலட்சம் ஏக்கர்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்குப் போதுமான பருத்தி நம்மிடத் தில் இல்லை. வெளிமாநிலங்களிலிருந்து வர வேண்டிய அவசியத் தில் இருக்கிறோம். எனவே இந்தக் குறையைப் போக்கும் வகையில் இன்னும் அதிகமான ஏக்கர்களில் பருத்திப் பயிர் முனைப்புத் திட்டத்தை அரசு கொண்டுவருமா? இப்படிக் கொண்டு வருவதால் எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஆண்டுக்காண்டு அதிகமாகப் பருத்தி விளைச்சலாகிக்கொண்டு வருகிறது தமிழகத்தில். இருந்தாலும் தமிழகத்தில் உள்ள மில்களுக்குத் தேவையான பருத்தி விளையவில்லை என்பது உண்மை. ஆகவேதான் இந்த முனைப்புத் திட்டம் இப்பொழுது செயல்பட்டு வருகிறது.